NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 22 ஆம் ஞாயிறு | 31 ஆகஸ்ட் 2025

எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

சமுதாயம் – இறைவாக்குரைத்தல்

காணக்கூடிய ஒத்துழைப்புக்கு அழைப்பு



# நமது நம்பிக்கையில் மனத்தாழ்மை

ஆகஸ்ட் மாதம் முழுவதும் நாம் மறைபோதகம் மற்றும் மறைபோதகத்தின் செயல்பாடுகள் குறித்த நமது சிந்தனைகளை நிறைவு செய்யும் இவ்வேளையில், மறைபோதகத்துக்கு அழைக்கப்பட்ட மக்களாக நமது பயணத்தின் மிக முக்கியமான ஒரு அம்சத்தை சிந்திக்க சிறிது நேரம் எடுத்துக்கொள்வோம்.- மனத்தாழ்மை

இன்றைய முதல் வாசகத்தில் உண்மையான ஞானம் பணிவில் தான் தொடங்குகிறது என்று நமக்கு நினைவூட்டுகிறது. கடவுளுக்கு முன்பாக நமது இடத்தை நாம் ஒப்புக்கொள்ளும்போது தான், அவரிடமிருந்து கற்றுக்கொள்ளத் தொடங்கமுடியும். இரண்டாம் வாசகம் இந்த உண்மையை இன்னும் வலுப்படுத்துகிறது.

நம்மைப் படைத்து, தம் மக்களாக நம்மைச் சேர்த்து, கடவுளின் புனிதர்களாகவும், அவரின் சுவீகாரக் குழந்தைகளாகவும் இருக்க நமக்கு அருளிய கடவுளின் மாட்சியை நினைவூட்டுகிறது. கடவுளின் மாட்சிக்கு முன் நாம் எவ்வளவு சிறியவர்கள், அவருடைய இரக்கத்துக்கு நாம் எவ்வளவு கடன்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்து நமது பணியிலும், நமது அன்றாட வாழ்க்கையிலும், நமது நம்பிக்கையை எதிரொலிக்கும்போது, அந்த மனத்தாழ்மையை பிரதிபலிக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

மனத்தாழ்மைக்கான அழைப்பு இன்றைய நற்செய்தியில் பிரதிபலிக்கிறது. இயேசு அந்தஸ்து அல்லது அங்கீகாரத்தை தேடும் சோதனைக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கிறார். அதற்குப் பதிலாக அவரைப் பின்தொடர்ந்தவர்களைத் தாழ்ந்த இடத்தை தேர்ந்தெடுக்க வலியுறுத்துகிறார். பலவீனமானவர்களுக்கும், தாழ்நிலையில் இருப்போருக்கும், நமக்கு திரும்ப செலுத்தமுடியாதவர்களுக்கும், செய்யும்போது கடவுளிடமிருந்தே நாம் அதற்குரிய பலனைப் பெற்றுக்கொள்ளும்படி நம்மை அழைக்கிறார். உண்மையான மாண்பு என்பது நாம் தானாக கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றல்ல; மாறாக கடவுள் நமக்கு தரும் ஒரு அருள் என்பதை நமக்கு அவர் கற்பிக்கிறார்.

குறிப்பாக, மறைபோதகர்களாக, தற்பெருமையிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்பதை நாம் தொடர்ந்து நினைவில் கொள்ளவேண்டும். வெற்றியை அளவிடுவது, பாராட்டுகள், காணக்கூடிய வெற்றிகளை அளவிடுவது என்னும் வலையில் விழுந்துவிடுவது மிகவும் எளிது. ஆனால் நமது பணி நம்மைப் பற்றியது அல்ல; இது கடவுள் நம் வழியாக செயலாற்றுவதைப் பற்றியது. நாம் தொடர்ந்து அவரது வழிகாட்டுதலைத் தேடவேண்டும். மேலும் நமது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டவர்களின் இதயங்களை வெற்றிகொள்ள அவரது வழிகாட்டுதலையும் அவருடைய அருளையும் எப்போதும் நாடவேண்டும்.

நாம் இறைவனுக்கு முன்பாக மனத்தாழ்மையுடன் நடக்கும்போது, நாம் செய்யும் சாதனைகளுக்கு அல்ல, மாறாக நாம் செய்யும் சேவை மனப்பான்மைக்காக ஈர்க்கப்படுகிறோம். **நமது மனத்தாழ்மை, சமூகத்தில் நாம் பிறரோடு இணைந்து செயல்படும் வாய்ப்பையும், தூய ஆவியார் நம்மிடையே அவரின் விருப்பம்போல் நம்மை நடத்துவதற்கும் இடத்தை உருவாக்குகிறது. அப்போது தான் நமது பணியின் பலன் நாம் கற்பனை செய்ததைவிட பலமடங்கு பெருகும்.**

ஆகையால், கடவுளுக்கு முன்பாக நமது இடத்தை ஏற்படுத்திக்கொள்ள அவரது அன்பில் முழுமையாக நம்பிக்கை வைக்கவும், அவருடன் மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ளவும் அவரின் அருளை மன்றாடுவோம். அவ்வாறு செய்வதன் மூலம் நாம் தனித்திருக்கும்போது சாதிக்கக்கூடிய எதையும் விட மிகப்பெரியதாக, அவர் நம் மூலமாக அவருடைய அரசைக் கட்டியெழுப்ப நாம் அவரை அனுமதிக்கிறோம். ✣

இறுமாப்பு வரும் முன்னே, இகழ்ச்சி வரும் பின்னே; தன்னடக்கம் இருக்குமாயின் ஞானமும் இருக்கும்

- நீதிமொழிகள்: 11:2

## இன்றைய இறைவார்த்தை:

சீராக்கின் ஞானநூல்: 3: 17-20, 28-29

திருப்பாடல்: 68: 4-7, 10-11

எபிரேயர் 12: 18-19, 22-24

லூக்கா 14: 1, 7-14

INTERNAL CIRCULATION ONLY
BUL 35/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org